


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஏப்ரல் 15, 2021 | புரட்சி 20 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00


# அரக்கோணம் ஜாதி வெறி இரட்டைப் படுகொலை: கழகம் கண்டனம்

***அரக்கோணம் ஜாதி வெறி இரட்டைப் படுகொலையைக் கண்டித்து கழகத் தலைவர் விடுத்துள்ள அறிக்கை :***

அரக்கோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோகனூரில் 08.04.2021 அன்று சாதிவெறியர்கள் நடத்திய கொலை வெறித் தாக்குதலில் தலித் இளைஞர்கள் அர்ஜுனன், சூரியா ஆகிய இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சட்டமன்றத் தேர்தலை ஒட்டிய பரப்புரையில் நடந்த தகராறுகளைக் காரணம் காட்டியும், விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளரை ஆதரித்த காரணத்திற்காகவும் பாமக மற்றும் அதிமுகவினர் இணைந்து தலித் இளைஞர்கள் மீது நடத்திய இந்த கொடூரத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

தலித் மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று தங்களுக்கான அதிகாரத்தை நோக்கி பயணிப்பதை சகிக்க முடியாத ஆதிக்க மனநிலை கொண்ட ஜாதி வெறியர்கள் சனாதன ஜாதி அமைப்பின் கொடூர வன்ம மனநிலையுடன் இக் கொலையைச் செய்துள்ளார்கள்.

இந்தத் தாக்குதல் மட்டுமல்லாமல் அரியலூர் மாவட்டம் பொய்யாத நல்லூரில் விசிக முகாம் செயலாளர் அன்பழகன், திருப்போரூர் தொகுதியில் பெருமாள் ஏரி என்னும் கிராமத்தில் கதிரவன் ஆகிய தலித் இளைஞர்களும் ஜாதி வெறியர்களின் கொலை வெறித் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

கொலை செய்தவர்கள், கொலை வெறி தாக்குதலில் ஈடுபட்டவர்கள் இதுவரை முழுவதுமாக கைது செய்யப் படவில்லை. அரசின் மெத்தனப் போக்கு வன்மையாக கண்டிக்கத் தக்கது.

அரசு ஜாதி வெறியர்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பது மட்டுமல்லாமல், இவ்விடங்களில் ஆளும் கட்சியான அதிமுகவினரும் பாமகவினருடன் இணைந்து தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலின் மற்றொரு முகமாக, தேர்தல் ஆதாயம் கருதி, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற, பொய் வாக்குறுதிகளை அள்ளிவீசி, ஒரு குறிப்பிட்ட ஜாதியினரை தனித்து அணி திரட்டி, அவர்கள் வாக்குகளை எல்லாம் ஒட்டு மொத்தமாக பெற்று விடலாம் என்கிற அதிமுகவின் செயல்பாடுகளும் ஜாதிய வெறியர்கள் ஒன்றிணைத்து கூர்மைப்பட ஒரு காரணமாக மாறிவிடுகிறது.

அரசியல் அதிகாரம், பொருளாதார இலாபம் அடையும் நோக்கமுடைய ஆதிக்க ஜாதி தலைவர்களால், ஆதிக்க ஜாதி வெறி ஏற்றப்பட்ட விழிப்புணர்வு இல்லாத ஏழை எளிய இளைஞர்கள் ஆதிக்க ஜாதி அரசியல் பகடைக்காய்களாக்கப்பட்டு எதிர்காலத்தை இழக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

தற்பொழுது நடந்த இந்த ஜாதிவெறி படுகொலையில் ஈடுபட்ட ஜாதிவெறியர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும்.

அவர்கள் மீது உரிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டு முறையாக வழக்கு நடத்தப்பட்டு கடும் தண்டனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவற்றை வலியுறுத்தி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தமிழகமெங்கும் வாய்ப்புள்ள இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.

இப் படுகொலைகளை கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள், தீண்டாமை ஒழிப்பு முன்னணி போன்ற அமைப்புகள் நடத்தும் கண்டன ஆர்ப்பாட்டங்களில் திராவிடர் விடுதலைக் கழகம் பங்கேற்கும்.

*(குறிப்பு : சென்னை, கோவை, திருப்பூர், மதுரை உள்ளிட்ட பல பகுதிகளில் தோழர்கள், விடுதலை சிறுத்தைகள் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.)*

## ‘பிரண்ட் லைன்’ அம்பலப்படுத்துகிறது

## கருத்துக் கணிப்பு வெளியிட்ட தொலைக்காட்சிகளுக்கு அரசின் மிரட்டல்

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று ‘பிரண்ட் லைன்’ ஆங்கில ஏடு (ஏப்.23) விரிவான கட்டுரை ஒன்றை எழுதியுள்ளது. அதில் கருத்துக் கணிப்பு வெளியிட்ட தொலைக்காட்சி ஊடகங்கள் எப்படி மிரட்டப்பட்டன என்ற தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

தி.மு.க. மிகப் பெரும் வெற்றி பெறும் என்ற கருத்துக் கணிப்புகளை தொலைக்காட்சிகள் ஒவ்வொரு நாளாக ஒளி பரப்பத் தொடங்கின. உடனே தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அரசு சார்பில் அழுத்தம் தரப்பட்டு ‘கடும் போட்டி நிலவுகிறது’ என்பதுபோல் மாற்றி ஒளி பரப்புமாறு மிரட்டினார்கள்.

குறிப்பாக ‘புதிய தலைமுறை’ தொலைக் காட்சியின் கருத்துக் கணிப்பு தி.மு.க.வின் வெற்றி உறுதியானது என்று கூறியவுடன் நெருக்கடிகள் தரப்பட்டதாக அந்த நிறுவனத்தில் பணியாற்றும் உயர் மட்ட நிர்வாகிகள் கூறினர். அதைத் தொடர்ந்து ‘புதிய தலைமுறை’ நடத்தும் மற்றொரு ஊடகமான ‘புதுயுகம்’ என்ற தொலைக்காட்சியில் அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெறும் என்று கருத்துக் கணிப்புகள் கூறுவதாக ஒரு போலியான கருத்துக் கணிப்பு ஒளி பரப்பப்பட்டது. தொடர்ந்து ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சி, ‘புதுயுகம்’ தொலைக்காட்சியின் (போலி) கருத்துக் கணிப்பையும் ஒளி பரப்புமாறு கட்டாயப்படுத்தி ஒளிபரப்ப வைத்தார்கள்.

‘மாலை முரசு’ தொலைக்காட்சி எடுத்த கருத்துக் கணிப்பு, அ.இ.அ.தி.மு.க.வின் மோசமான தோல்விகளை உறுதிப்படுத்தியது. இதில் முதல்கட்டமாக மார்ச் 25ஆம் தேதி 50 தொகுதிகளுக்கான கருத்துக் கணிப்புகள் ஒளி பரப்பப்பட்டன. உடனே அரசு கேபிள் இணைப்பில் தர வரிசையில் கீழே தள்ளப்பட்டு தொலைக்காட்சி ஒளி பரப்பை தெளிவாக பார்க்க முடியாமல் செய்து விட்டார்கள். அரசு கேபிள் நிறுவனம் தமிழக அரசு கட்டுப்பாட்டிலுள்ள அமைப்பாகும்.

உடனே ‘மாலை முரசு’ தொலைக்காட்சி நிறுவனம் தேர்தல் ஆணையர் சுனில் அரோராவுக்கு எழுத்துப் பூர்வமாக புகார் அளித்தது. “நாங்கள் முதல் நாள் கருத்துக் கணிப்பு முடிவுகளை வெளியிட்ட உடன் 146ஆவது வரிசையில் இடம் பெற்றிருந்த எங்கள் கேபிள் இணைப்பு - பார்வையாளர்கள் தெளிவாக பார்க்க முடியாத நிலைக்கு இருட்டடிப்புக்கு உள்ளாக்கப்பட்டது. இதில் ஆளும் கட்சியின் தலையீடு இருப்பதால் தேர்தல் ஆணையம் தலையிட வேண்டும்” என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தொடர்ந்து அ.இ.அ.தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு, கடும் போட்டி நிலவுகிறது என்பதுபோல பல தொலைக்காட்சிகள் கருத்துக் கணிப்பு வெளியிட கட்டாயப்படுத்தப் பட்டன.

‘டைம்ஸ் நவ்’ ஆங்கில தொலைக்காட்சி, பிரதமர் நரேந்திர மோடிக்கு மிகவும் நெருக்கமான நிறுவனம் என்றாலும் இந்த சதிக்கு உடன்பட மறுத்து விட்டது. தி.மு.க. அணி 177 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும் என்று ‘சி ஓட்டர்’ நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது கருத்துக் கணிப்பையும் நடத்தி அது உறுதி செய்தது - என்ற தகவலை ‘பிரண்ட் லைன்’ வெளியிட்டுள்ளது.

## ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு கட்டுரை

## ‘எடப்பாடி ஏமாற்றத்தில் இருக்கிறார்’

**தமிழ்நாட்டில் நடந்த வாக்குப் பதிவுக்குப் பிறகு தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (ஏப்.10) செய்தி வெளியிட்டுள்ளது.**

‘மிகப் பெரும் வெற்றிக்காக தி.மு.க. வேட்பாளர்கள் காத்திருக்கிறார்கள்’ என்று தலைப்பிட்டுள்ளது. வாக்குப் பதிவு நடந்த மூன்று நாட் களுக்குப் பிறகு தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெறப் போகும் மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கிறார்கள் என்றும் சென்னைக்கு வந்து தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினோடு தங்கள் தொகுதி நிலவரம் - வாக்காளர்கள் மன நிலையை விரிவாக விளக்கி வருகிறார்கள் என்றும் அந்த செய்தி கூறுகிறது.

முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கூறுகையில் - தமிழ்நாடு முழுதுமிருந்தும் தி.மு.க. அணி வேட்பாளர்களிடமிருந்து வரும் கருத்துகள் வெற்றியை உறுதி செய்து ஒருமித்து இருக்கிறது என்றும் கூட்டணியை உருவாக்கியதில் தி.மு.க. தலைவர் மிகவும் சாதுர்யமாக செயல்பட்டதையும் அ.தி.மு.க. கூட்டணி உருவாக்கத்தில் குழப்பங்கள் மேலோங்கி சில கட்சிகள் விலகிப் போனதையும் சுட்டிக் காட்டினார்.

10.5. சதவீத வன்னியர் ஒதுக்கீடு காரணமாக சில மாவட்டங்களில் பா.ம.க.வினர் உற்சாகமாக வேலை செய்தனர் என்றாலும் பெரும்பாலான தொகுதிகளில் பா.ம.க.வினர் ஓட்டு அ.இ.அ.தி.மு.க. வுக்கு விழவில்லை என்றும், பா.ம.க. கூட்டணி இருந்திருக்காவிட்டால் அ.இ.அ.தி.மு.க. மேலும் மோசமான தோல்வியை சந்தித்திருக்கும் என்றும் மன்னார்குடி தி.மு.க. வேட்பாளர் டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

அ.இ.அ.தி.மு.க. களப் பணியாளர்கள் சோர்வடைந்த நிலையில் அடக்கியே பேசுகிறார்கள் என்று செய்தி வெளியிட்டுள்ள அந்த ஆங்கில நாளேடு, முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வாக்குப் பதிவுக்கு ஒரு சில நாட்களுக்கு முன் கொங்கு மண்டலத்தில் உள்ள மூத்த காவல் துறை அதிகாரிகள் தி.மு.க.வுக்கு ஆதரவாக செயல்படுவதாகக் கூறி அவர்களை இடமாற்றம் செய்ய தேர்தல் ஆணையத்திடம் வலியுறுத்தினார் என்ற செய்தியைப் பதிவு செய்திருக்கிறது.


கட்சிக்காரர்கள், தேர்தலில் முனைப்புடன் ஜெயலலிதா காலத்தில் வேலை செய்தது போல் வேலை செய்யவில்லை என்று எடப்பாடி வருந்துவதாகவும் இது எடப்பாடி பழனிச்சாமிக்கு பெரும் ஏமாற்றமாகி விட்டது என்ற தகவலையும் அந்த ஏடு வெளியிட்டிருக்கிறது. பா.ஜ.க.வுக்கு எதிராக தி.மு.க.வினர் செய்த கடைசி நேர பரப்புரை, வாக்காளர்களை அ.இ.அ.தி.மு.க.வுக்கு எதிராக திருப்பி விட்டுவிட்டது என்றும், இதை வலிமையாக அ.இ.அ.தி.மு.க. தலைமை எதிர்கொள்ளவில்லை என்றும் அ.இ.அ.தி.மு.க. மூத்தத் தலைவர் ஒருவர் கூறியதாக ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ செய்தி வெளியிட்டுள்ளது.

ஆர்.பி. உதயகுமார் என்ற அமைச்சர், அ.இ.அ.தி.மு.க.வே மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று கூறியிருப்பதையும் பதிவு செய்துள்ளது.

தலையங்கம்

# தோழர் ஆனைமுத்து விடைபெற்றுக் கொண்டார்

## (1925-2021)



தோழர் ஆனைமுத்து விடை பெற்றுக் கொண்டார்; தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடந்த ஏப்.6, 2021 அன்று இந்தத் துயரமான செய்தியும் வந்தது. கருஞ்சட்டையுடன் கண்ணாடிப் பேழைக்குள் வைத்திருந்த அவரது உடலில் விரல்கள் அவருக்குரிய மிகச் சிறந்த அடையாளத்தை ஏந்தி இருந்தது. அதுதான் அவரது எழுதுகோல் (பேனா). பெரியாரியலை முதன்முதலாக தொகுப்புகளாக்கி மக்கள் மன்றத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தார் என்பதே அவருக்கான தனித்துவமான முதன்மை அடையாளம்.

96 ஆண்டுகள் முழுமையான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார். மனித ஆயுள் நீட்டிப்புக்கு நவீன மருத்துவ அறிவியலைப் பயன்படுத்திக் கொள்ளும் சமூகம், 'கடவுள் அருளை'த்தான் நம்புகிறது. இப்படி அறிவியலுக்கு எதிராக மதம் கட்டமைத்த மூடநம்பிக்கைகளை மக்களிடம் பரப்பும் பெரியாரியல்வாதிகள் தங்கள் வாழ்க்கையையே சான்றுகளாக மக்களிடம் விட்டுச் செல்கிறார்கள். ஆம்! கடவுளை மறுத்து இறுதிக் காலம் வரை நேர்மையாக சமூகப் பணியாற்றி பெரியாரைப் போலவே அவரது தொண்டர்களும் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள் இதுவே உயிரியக்கத்திலிருந்து விடைபெறுவதற்கு முன் இவர்கள் சமூகத்துக்கு விடுத்துச் செல்லும் அறிவியல் பாடம்.

'தோழர்' ஆனைமுத்து, தன்னை தோழர் என்று அழைப்பதையே விரும்புவார். பெரியார் கொள்கைப் பாதையில் 70 ஆண்டுகாலம் பயணித்திருக்கிறார். 20ஆம் வயதில் 1945 இல் திராவிடர் கழகத்தில் இணைந்து, 32ஆவது வயதில் பெரியார் அறிவித்த சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று 18 மாதம் சிறைத் தண்டனை பெற்று பெரியார் இறுதிக் காலம் வரை அவரது கொள்கைக்காகவே தன்னை அர்ப்பணித்தார்.

பெரியார் பேச்சுகளையும் எழுத்துகளையும் அவர் நடத்திய குடிஅரசு, பகுத்தறிவு, திராவிடன், விடுதலை போன்ற இதழ்களிலே மட்டும் தேடிப் படிக்க வேண்டிய நிலை தான் 1974 வரை இருந்தது என்பது மிகப் பெரும் சோகம். அந்த ஏடுகளும் ஆய்வாளர்களுக்குக்கூட எளிதில் கிடைக்கப் பெறாத நிலையில் பெரியார் அனுமதியோடு அவரது சிந்தனைகளை மூன்று தொகுதிகளாக வெளியிடும் முயற்சிகளில் தோழர் ஆனைமுத்து இறங்கினார். திருச்சியில் உருவான சிந்தனையாளர் கழகம் என்ற அமைப்பு இதற்கான முயற்சிகளை மேற்கொண்டாலும் தொகுப்புப் பணிகளை தலை மீது சுமந்து, 'கடும் தடை'களை எதிர்கொண்டு பெரியார் நடத்திய ஏடுகளைத் திரட்டினார். ஓராண்டு கடும் உழைப்புக்குப் பிறகு பெரியாரின் ஒப்புதலோடு பெரியார் சிந்தனைகளின் மூன்று தொகுப்புகள் பெரியார் முடிவெய்திய அடுத்த ஆண்டில் 1974 இல் திருச்சியில் வெளியிடப் பட்டது.

அதற்குப் பின் 35 ஆண்டுகள் கழித்து 2009 இல் 20 தொகுதிகளாக விரிவாக்கி, 'பெரியார் ஈ.வெ. ராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சிக் கட்டளை' வழியாக உரிய பதிப்புரிமையோடு வெளியிட்டார். (பெரியார் திராவிடர் கழகம், பெரியார் எழுத்து-பேச்சுகளை ஆண்டுவாரியாக கால வரிசைப்படி தொகுத்து 2010 இல் வெளியிட்டது. இதற்கு எதிராக பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் நீதிமன்றத்தில் கோரிய இடைக்காலத் தடைகளைத் தகர்த்து வெளிக் கொணர்ந்தது)

தோழர் ஆனைமுத்து அவர்களின் மற்றொரு குறிப்பிடத்தக்க வெளியீடு 'பெரியாரின் அயல்நாட்டுப் பயணக் குறிப்புகள்' என்ற பெரியார் கைப்பட எழுதிய நாட்குறிப்பாகும். 1931-32 இல் பெரியார் ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்கு 331 நாட்கள் பயணம் செய்தபோது ஒவ்வொரு நாளும் பயண நினைவுகளை நாட்குறிப்பில் பதிவு செய்தார். அதில் 73 நாட்களுக்கான பயணக் குறிப்பு மட்டும் பெரியாரின் அண்ணன் ஈ.வெ.கி.கிருஷ்ணசாமியின் இரண்டாவது மகன் ஈ.வெ.கி. செல்வராஜ் அவர்களிடமிருந்து இவருக்குக் கிடைத்தது. அந்தப் பயண அனுபவங்களை முழுமையாக விவரிக்கும் வரலாற்று ஆவணத்தை, தனது சொந்த முயற்சியில் 1997 இல் வெளியிட்டார். பெரியார் கையெழுத்துப் பிரதிகளுடன் அது வெளி வந்தது. இந்த அரும்பணிகளோடு வடநாட்டில் பெரியாரின் வகுப்புவாரி கொள்கைகளைக் கொண்டு சென்றது, அவரது மற்றொரு மகத்தான தொண்டு.

மத்திய அரசுப் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு உரிய விகிதாச்சாரத்தைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக உ.பி., பீகார், இராஜஸ்தான், டெல்லி உள்ளிட்ட வடமாநிலங்களுக்கு தொடர்ந்து பயணம் மேற்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சமூக நீதியில் பற்றுள்ள தலைவர்களையும் சந்தித்து உரையாடினார். குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவரெட்டியை சந்தித்து, பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு ஆணைய அமைச்சகம் வற்புறுத்தும் மனுவைத் தந்ததோடு பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாயையும் சந்தித்து நேரில் வாதிட்டார். பிரதமர் மொரார்ஜி ஒப்புதலோடு மண்டல் ஆணையம் அதற்குப் பிறகு தான் அமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த காலத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்தப்பட்டதிலும் இவரது பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

ஒரு பெரியார் தொண்டருக்கு உரிய எளிமை, கொள்கை மீதான உறுதி, சமூகக் கவலையோடு அர்ப்பணித்த வாழ்க்கை போன்ற உயரிய விழுமியங்களோடு அவர் வாழ்ந்தார்.

இந்தியா பிரிட்டிஷ் காலனி ஆட்சிப் பிடியில் இருந்த காலத்தில், அவர் பெரியார் இயக்கம் நோக்கி வந்தார். நாடு முழுதும் 'சுயராஜ்யம்', 'காந்தி' என்ற உணர்வுகள் அலைகளாக வீசிய காலத்தில் அவற்றில் அடங்கியுள்ள 'பார்ப்பனிய – வர்ணாஸ்ரம' மேலாதிக்கத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமைத்தனத்தையும் மக்களிடம் அந்தச் சூழலில் பேசுவது அவ்வளவு எளிதல்ல. துணிவோடு உரத்து முழக்கமிட்டு எதிர்நீச்சல் போட்ட தலைவராக பெரியார் ஒருவர் மட்டுமே இருந்தார். 'இது சுதந்திர நாள் அல்ல; துக்க நாள்' என்று உரத்து முழங்கினார்.

அந்தக் காலங்களிலும் சரி, காங்கிரஸ் பார்ப்பனர்களின் கட்சியாக அதிகார பீடத்துக்கு வந்த காலத்திலும் சரி, அதைத் தொடர்ந்து மாநிலங்களின் குரல் ஓங்கி மாநிலக் கட்சிகள் உருவான காலங்களிலும் சரி, அதைத் தொடர்ந்து 1990களில் நாட்டின் சமூகப் பொருளியல் – வாழ்வியலை தலைக்கீழாகப் புரட்டிப் போட்ட 'உலகமயமாக்கல்' கொள்கை நுழைந்த காலத்திலும் சரி, பெரியாரின் கொள்கைகளோடு பயணித்த மூத்த தலைவர் என்ற பெருமை தோழர் ஆனைமுத்துவுக்கு உண்டு. அரசியலில் உருமாற்றங்கள் நிகழ்ந்தாலும் பார்ப்பனிய வர்ணாஸ்ரம ஆதிக்கம் தனது உருவங்களை அதற்கேற்ப மாற்றிக் கொண்டு உயிர்த் துடிப்போடு தன்னை தக்க வைத்துக் கொண்டிருப்பதை வரலாறு இப்போதும் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

பெரியார் இறப்புக்குப் பிறகு இயக்க முரண்பாடுகளால் அவர் திராவிடர் கழகத்திலிருந்து நீக்கப்பட்டார். ஆனாலும் பெரியார் சமஉரிமைக் கழகம், பிறகு மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி என்ற பெயர் மாற்றங்களோடு அவர் பெரியாரியலைத்தான் முன்னெடுத்தார். அதிலும் முதன்மையானதாக அவர் 'வகுப்புரிமை' என்ற ஒற்றை இலட்சியத்துக்குள்ளேயே உறுதியாக சுழன்றுக் கொண்டிருந்தார்.

இளைய தலைமுறை இன்று பெரியார் என்ற 'புரட்சிக் கிழவருக்கு' 'ஜீன்ஸ் பேண்ட்' அணிவித்து ஓவியம் தீட்டுகிறது. அதன் உட்பொருள் பெரியாரின் புரட்சி கருத்துகளை சமூக மாற்றத்தைக் கோரும் இளைய தலைமுறை தன்வயமாக்கிக் கொண்டுவிட்டது என்பது தான்.

தோழர் ஆனைமுத்து இன்றைய இளைய தலைமுறைக்கு, கடந்த தலைமுறை பெரியாரியலின் சாட்சியமாக நிற்கிறார்!

தோழர் ஆனைமுத்து முடிவெய்தினார்; தோழர் ஆனைமுத்து வாழ்க!

# 'சூழலும்–சாதியும்'




'சூழலியலில்' ஆய்வுகளில் மிகப் பெரும் பங்காற்றி வரும் ஆய்வாளர் நக்கீரன் எழுதி அண்மையில் வெளி வந்திருக்கும் நூல் 'சூழலும் - சாதியும்'. சாதியத்துக்கும் சூழலியலுக்கும் உள்ள உறவுகள் இவ்வளவு துல்லியமாக இதுவரை ஆராயப்பட வில்லை என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

சமூகப் பார்வையைத் துண்டித்துக் கொண்டு சூழலியல் மட்டும் பேசுகிற ஆய்வாளர்களும் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் உண்ணும் உணவு, உடுத்தும் உடை, வாழும் இடம் என வாழ்க்கையின் ஒவ்வொரு கூறிலும் 'சூழலியம்' சமூகத்துடன் பிணைந்து நிற்கிறது. சமூகத்தோடு துண்டித்து விடாமல் சாதியமும் பிணைந்து நிற்கிறது. நூலாசிரியரே முன்னுரையில் இந்நூலை பற்றி சுருக்கமான படப்பிடிப்பை இவ்வாறு வழங்கியிருக்கிறார். "நீர், நிலம், தீ, காற்று, வானம், திசைகள், தாவரங்கள், உயிரினங்கள் ஆகிய அனைத்தும் தீண்டாமைக்கு உள்ளாக்கப்பட்ட செய்தி பலருக்குப் புதிதாக இருக்கலாம். புல்லும் பூணூலும் உயர்ஜாதி அடையாளமானது எப்படி? சுற்றுச் சூழல் தூய்மை என்ற சிறந்த சிந்தனையின் மீது கழுவ முடியாத ஜாதிக் கறை படிந்தது எப்படி, இயற்கையின் அசல் நிறமான கறுப்பு இழிவாக்கப்பட்டது எப்படி? போன்ற கேள்வி களுக்கான விடைகள் இதில் அடங்கியுள்ளன. 'கறுப்பர் களான' தென்னிந்தியர்களுடன் நாங்கள் இணைந்து வாழவில்லையா என்று கேட்கும் தருண் விஜய் போன்ற திமிரான குரல்களின் பின்னணியை அடையாளம் காண இந்த விளக்கங்கள் நமக்கு உதவும்."

சோமபானம் சுராபானத்தை மட்டுமே குடித்து சோர்வடைந்த ஆரியர்கள் உண்ணுவதற்கு உணவு வேண்டும் என்பதற்காக காடுகளை எரித்து வேளாண் நிலமாக்கியதையும் காடுகள் எரிக்கப்பட்ட போது அங்கே வாழ்ந்த பழங்குடி மக்களையும் சேர்த்தே எரித்ததையும் 'சதபத - பிராமணர்' எழுதி வைத்திருக்கிறார்.

ஒளி தரும் பகல் மகிழ்ச்சியானது. ஒளியற்ற இருள் துன்பமானது என்ற கருத்து ஆரியர் நூல்களான வேதம் முதல் இராமாயணம் வரை முழுதும் பரந்து கிடக்கிறது. அந்த அடிப்படையிலேயே கருப்பு இழிவு வெள்ளை உயர்வு என்ற கருத்தியலும் வர்ணதர்ம கோட்பாடும் உருவானது என்பதை பல்வேறு ஆய்வறிஞர்களின் மேற்கோள்களோடு நூல் நிறுவுகிறது.

'காலம் - வெளி' (Time - Sp ace) இரண்டுமே இயற்கையின் கூறுகள். அதிலும் பார்ப்பனர்கள் தீண்டாமையைத் திணித்தார்கள். இதில் தீண்டப்படாதவர்களுக்கான 'வெளி' ஊருக்கு புறம்பானது. அவை சேரிகள் தீட்டுக்குரியவை. 'பிராமணர்களுக்கான' வெளி 'புனிதமான' அக்கிரகாரங்கள் கோயில்கள் .


மனித உடல் 'பஞ்ச பூதங்கள்' என்ற இயற்கையின் தொகுப்பு. இயற்கை உயிருள்ளது என்பதே உலகின் பழங் காலச் சிறப்பு. ஆனால் உடல்கள் அனைத்தும் சமமதிப்புக் கொண்டவை எனும் கருத்து பார்ப்பனர்களுக்கு உவப்பானதாக இல்லை. எனவே உடலை சமப்படுத்துவதை பார்ப்பனியம் வெறுத்தது; உடலைக் கடந்து நிற்கும் 'பிரம்மம்' மட்டுமே சுயமானது. மற்ற இயற்கை சார்ந்த உடல் உள்ளிட்ட அனைத்தும் சுயமற்றவை என்ற தத்துவத்தை உருவாக்கியது. அதற்கு 'பிரம்மம்' என்று பெயர் சூட்டியது.

அதேபோன்று நிலம், நீர், தீ, காற்று, வானம், திசைகள், உணவு, தாவரம், பறவை மற்றும் சுற்றுச் சூழலியலில் ஜாதி யும், தீண்டாமையும் எப்படி கட்டமைக்கப்பட் டிருக்கிறது என்பதை உரிய ஆதாரங்களுடன் நிறுவுகிறது இந்த நூல்.

சூழலியலாளர்கள் ஜாதி எதிர்ப்பாளர்களாகவும் ஜாதி எதிர்ப்பாளர்கள் சூழலியல் காப்பாளர்களாகவும் இணைந்து நிற்க வேண்டிய கருத்தை வலியுறுத்தும் இந்த நூல் தமிழ் படைப்புலகில் மிக்க கூர்மையான அறிவியல் முயற்சி.

வெளியீடு :
காடோடி பதிப்பகம், 6 வி.கே.என். நகர், நன்னிலம்-610 105,
திருவாரூர் மாவட்டம். தொடர்புக்கு : 8072730977

## தனிக் கிணறு வேண்டாம்



"இந்தக் கிணற்றைத் திறந்து வைக்கும் வேலையை பெருமையெனக் கருதி நீங்கள் எனக்களித்திருந்தாலும், உண்மையில் எனக்கு அதைத் திறந்து வைக்கக் கொஞ்ச மும் மனமில்லை. அல்லாமலும் இதை ஒரு சிறுமையாகவே மதித்து மிகுந்த சங்கடத்துடனேயே இந்த வைபவத்தில் கலந்து கொள்கிறேன். ஆதித் திராவிடர்களுக்கென்று தனிக்கிணறு வெட்டுவது அக்கிரமென்பதே எனது அபிப்பிராயம். இவ்வாறு தனிக் கிணறுகள் வெட்டுவது, ஆதித்திராவிடர்கள் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள், அவர்கள் நம்முடன் கலக்கத் தக்கவர்களல்ல எனறு ஒரு நிரந்தரமான வேலியும் ஞாபகக் குறிப்பும் ஏற்படுத் துவதாகத்தான் அருத்தமாகும். எதற்காக அவர்களுக்குத் தனிக் கிணறு வெட்ட வேண்டும்? சிலர் ஆதித்திராவிடர்களுக்கு நன்மை செய்வதாக வேடம் போட்டுத் தாங்கள் உயர்ந்த வர்கள் என்பதை நிலைநிறுத்திக் கொள்ளத்தான் இவ்வித தர்மங்கள் உதவும். நமது கிணறு குளங்களில் ஆதித் திராவிடர் களை ஏன் தண்ணீர் எடுக்க அனுமதிக்கலாகாது? பட்சிகளும் மிருகங்களும் குளங்களில் தண்ணீர் சாப்பிடுவதில்லையா? குளங்களுக்கு எங்கிருந்து தண்ணீர் வருகிற தென்பது உங்க ளுக்குத் தெரியாதா? அதில் என்ன என்ன வருகிறது என்பது உங்களுக்குத் தெரியாதா? இவ்விதம் வரும் தண்ணீரை ஆதி திராவிடர்கள் எடுத்துச் சாப்பிட்டு விடுவ தனால் என்ன கெடுதி ஏற்பட்டுவிடும்."

(குடிஅரசு 25.04.1926)

## ‘பெரியாரும்–மார்க்சியமும்’ தலைப்பில் கொளத்தூர் மணி உரை (9)

# 5 வருடங்களில் கடவுள் மதங்கள் முற்றாக ஒழிக்க ரஷ்யா உருவாக்கிய திட்டம்

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

பத்து சதவிகித உயர்ஜாதி ஏழைகள் இட ஒதுக்கீட்டைப் பற்றி தோழர் பேசுகிற போது குறிப்பிட்டார். காங்கிரஸ்காரர்களே ஏற்கனவே அப்படி ஒரு முயற்சி எடுத்தார்கள். வடக்கே இருக்கிற எல்லாருமே அப்படித்தான் இருப்பார்கள். நம்மூர் காங்கிரஸ்காரர் அப்படி பேசமாட்டார். நரசிம்ம ராவ் தலைமை அமைச்சர் ஆனவுடனே புதிதாக ஒரு சட்டம் கொண்டு வந்தார். வி.பி.சிங் போட்ட உத்தரவோடு சேர்த்து, இன்னொரு இரண்டாவது உத்தரவு போட்டார் ஆட்சிக்கு வந்தவுடனே. எந்த வித இட ஒதுக்கீட்டுப் பிரிவுக்குள்ளும் வராத ஜாதியைச் சேர்ந்த ஏழைகளுக்கு பத்து சதவிகிதம் என்று போட்டார். அதை பின்னர் உச்ச நீதி மன்றம் செல்லாது என்று சொல்லிவிட்டது. ஒன்பது நீதிபதிகள் கொண்ட ஆயம் செல்லாது என்று சொல்லி விட்டது. அது தான் இந்திரா சஹானி வழக்கு, மண்டல் கமிஷன் வழக்கில் சொல்லி விட்டார்கள். வி.பி.சிங்கின் பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இட ஒதுக்கீட்டு உத்தரவு செல்லும்; நரசிம்மராவ் பிறப்பித்த 10% பொருளாதார அடிப்படை உத்தரவு செல்லாது, அது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று. ஆனால், அதை மீண்டும் கொண்டு வந்து விட்டார்கள். எதிர்ப்பில்லாமல் கொண்டு வந்து விட்டார்கள். முதலில் கேட்டபொழுதெல்லாம், 50 சதவிதத்துக்கு மேல் இட ஒதுக்கீடு இல்லை என்றார்கள். இப்பொழுது 60% சதவிகிதம் இருக்கலாம் என்று இவர்களே சட்டத்தை திருத்திக் கொண்டார்கள். உச்ச நீதிமன்றம் தவறு என்று தீர்ப்பு சொல்லி விட்டது என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள், மண்டல் கமிஷன் வழக்கிலும் அதையேதான் சொன்னார்கள். 50 விழுக்காட்டுக்கு மேல் இட ஒதுக்கீடு போகக்கூடாது. ஆனால் இப்போது 50க்கும் மேலாக நிலவிக் கொண்டிருக்கிற இடங்களைப் பற்றிய மறு பரிசீலனை வேண்டு மென்றால் செய்யலாம், அதை நீட்டிப்பதற்கு, அனுமதிப்பதற்கு, யோசிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொன்னது, வட கிழக்கு மாகாணங்கள் என்றிருக்கிற அருணாசலப் பிரதேசத்தில் எஸ்.டி., பழங்குடியினர் இட ஒதுக்கீடு 80% ஆக இருக்கிறது. அது போன்ற குறிப்பிட்ட சூழலில், அதைப் பற்றி யோசிக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது புதிதாக இட ஒதுக்கீடு தருகிறார்கள். யாருக்கு ஏழை மக்களுக்காக இருப்பவர்களுக்குத் தான், எந்த ஏழைகளுக்கு? ஏழைகளுக்கு கொடு என்று கூட சொல்லியிருக்கலாம். அது சரியோ தப்போ. அரசியல் சட்டத்தில் ஏழ்மைக்காக உதவித் தொகைக் கொடுக்கலாம். வீக்கர் செக்ஷன்களுக்கு 46 என்கிற ஒரு பிரிவு இருக்கிறது நமக்கு. Directive Principles of the State Policy, வீக்கர் செக்ஷன்களுக்கு கொடுக்கலாம் என்று. அதிலும் யாரெல்லாம் சுரண்டலுக்கு ஆளாகிறார்களோ அந்த மக்களுக்கு என்றுதான் சொல்லியிருக்கிறான். ஆனால் இவர்களோ சுரண்டுகிற மக்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்துள்ளார்கள்.

மற்றொன்று, ரஷியாவில் இருப்பதை பற்றி பெரியார் தலையங்கம் ஒன்றை எழுதுகிறார். ஏன் பயப்படவேண்டும் என்று. 04-12-1932-ல் ரஷியாவில் நடந்ததைப் பற்றி எழுதுகிறார். ரஷிய சர்க்கார் தங்கள் நாட்டில் ஐந்து வருடத்திற்குள் கடவுள் மதம் கோவில்கள் இல்லாதிருக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஐந்து வருஷ நாஸ்திகத் திட்டதைப் பற்றி லண்டன் பார்லிமெண்ட் மெம்பெர் தோழர் ஆதல் டச்சஸ் பேசிய விருந்துப் பேச்சில் குறிப்பிட்டது என்னவென்றால்..., பெரியார் குடிஅரசில் பதிவு செய்கிறார். ஆனால் பேசியது ரஷியாவில் அல்ல. இங்கிருக்கிற லண்டன் பார்லிமெண்ட் கம்யூனிஸ்ட் மெம்பர் பேசியிருக்கிறார். “முதல் வருஷத்தில், கோவில்களையும் மார்க்க ஆராதனை இடங்களையும் மூடிவிடுவது என்றும் முடிவு செய்கிறார்கள். இரண்டாவது வருஷத்தில், எந்த வீடுகளிலும் பிரார்த்தனைக்கு இடம் இருக்கக் கூடாது என்பதுடன், சர்க்கார் உத்தியோகத்தில் மத சம்பந்தமான எண்ணம் உடையவர்கள் யாவரும் இல்லாமல் செய்துவிடுவது, மத சம்பந்தமான



புஸ்தககங்கள் ஆதாரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டாக வேண்டும், நாத்திகப் படம் நாடகம் சினிமா முதலியவை நூற்றுக் கணக்காக நடத்த வேண்டும் என்கிற இரண்டாவது ஆண்டு திட்டம். மூன்றாவது ஆண்டு திட்டம் ஐந்து வருஷத்தில் எந்த வீடுகளிலும் கடவுள் என்ற உச்சரிப்பே இல்லாதபடி செய்து விடுவது, இந்த உத்தரவை கீழ்ப்படியாதவர்கள் தேசத்தை விட்டே வெளியாக்கி விடுவது. நாலாவது வருஷம், எல்லா கோவில்களையும் பிரார்த்தனை ஸ்தலங்களையும், பொது நன்மைக்கு பயன்படும்படி சினிமா இளைப் பாறும் மண்டபமும், காலப்போக்கு ஸ்தலங்களாக மாற்றி விடுவது. ஐந்தாவது வருஷத்தில், அதாவது 01.05.1937-க்குள், கடவுளுக்கு வீடோ, வணக்க இடமோ, நினைக்க உள்ளமோ ரஷிய எல்லைக்குள் இருக்கக் கூடாது என்று முடிவு செய்திருக்கிறார்கள்” என்று லண்டன் பார்லிமெண்டில் அவர் பேசியிருக் கிறார். அப்படி திட்டமிட்டிருக்கிறது அந்த நாட்டில், ஆனால் நீங்கள் இன்னும் இப்படி செய்து கொண்டிருக்கிறீர்களே, நீங்கள் கொஞ்சமாவது திருந்த வேண்டாமா, என்று அவர் பேசியதை, பெரியார் எடுத்து தனது பத்திரிக்கையில் போட்டிருக்கிறார்.

- **கிறிஸ்தவ மதத்தில் அடிமை முறை இருந்ததை கிறிஸ்தவ மதமே ஒழிக்க முன் வந்தது.**
- **ஒரே மதத்தில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆவதை பார்ப்பனர்கள் எதிர்க்கிறார்கள்.**

கடவுளை ஒழிப்பது என்பது பணக்காரர்களை ஒழிப்பதாகும். மதத்தை ஒழிப்பது என்பது உயர்வு-தாழ்வை அழிப்பதாகும், என்று கடைசியாக அந்தப் பேச்சை முடித்திருக்கிறார், அந்த நாட்டிலேயே. கிருஸ்துவ மதத்தில் ஏற்றத் தாழ்வு இல்லாத நாடு தான் அது. ஒரு கிருஸ்துவன் இன்னொரு கிருஸ்துவனை அடிமைப்படுத்துவது கூடாது என்பதற்காக அவர்களுக்கு அடிமை முறையிலிருந்து விடுதலை அளித்தார்கள். இங்கோ ஒரு இந்துவே அதே மதத்தைச் சார்ந்தவனை அடிமையாக வைத்துக் கொண்டிருப்பதா? அப்படிப்பட்ட மனிதாபிமான மதத்தைக் கூட இல்லாமல் செய்துவிட வேண்டும் என்று கருதுகிற இந்தக் காலத்தில், தன்னளவில் ஒரு சிறு மாற்றத்தைக் கூட இந்து மதத்தில் நடைபெற வில்லையே. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். தோழர் நாத்திகம் பேசுகிறார், தலைவர் நாத்திகம் பேசினார், நான் நாத்திகம் பேசுகிறேன். தோழர் சுலிப் நாத்திகம் பேசுகிறார். எங்களை விட்டுவிடுங்கள். கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை, அதனுடன் வேத ஆகமங்களில் பயிற்சி பெற்றவர்களை வழிபாட்டு முறையில் பயிற்சி பெற்றவர்களை, ஏன் நீங்கள் அனுமதிக்கக்கூடாது என்பதுதான் கேள்வி.

நீ வேண்டுமானால், மார்பளவுகூட 56 இன்ச்சு என்று தகுதி வைத்துக் கொள்ளலாம். ஏதாவது ஒரு தகுதியை வை. ஒரே தகுதி எல்லோருக்கும் வை. அவர்களை ஏன் அனுமதிக்கக் கூடாது என்ற கேள்விக்கு பதில் இல்லை. தங்களை சிறு மாற்றம் கூட செய்து கொள்ள மறுக்கிறார்கள். ஆனால், இன்னொரு பக்கம் - எந்த காலத்திலோ, 640-ல் கலீலியோவிற்கு தண்டனை கொடுக்கிறார்கள், உலகம் உருண்டை என்று சொன்னதற்காக. பின்னால் 1992-ல் போப் இரண்டாம் பால் வந்து அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார், செய்து இருக்கக்கூடாது, நாங்கள் செய்தது பிழையானது என்று சொன்னார். அந்த பிக் பேங் தியரி மாற்றத்தை அனுமதிக்கிற இவ்வாறான மதத்தைக் கூட இருக்கக்கூடாது என்று கருதுகிற மேல் நாட்டு பொதுவுடமையாளர்களும், முற்று முழுதாக ஏற்றத் தாழ்வை நியாயப்படுத்துகிற, இருந்தாக வேண்டும் என்று சொல்லுகிற, கடவுளே விதித்துவிட்ட வருண, ஜாதிப் பிரிவுகளை, ஒரு சிறிதும் திருத்தக் கூடாது என்று சொல்லுகிற, இந்து மதத்தின் மீதான விமரிசனமும், இந்த மதம் காப்பாற்றி வைத்திருக்கிற வர்ணாசிரமம் மீதான விமரிசனமும் இல்லையென்றால், எப்படி இந்த நாட்டில் பொதுவுடமை வரும்?

பெரியார் சொன்னது, முதல் போட்ட மூலதன முதலாளிகளை மட்டுமே கவனித்துக் கொண்டிருக்கிறீர்களே, பிறவி முதலாளிகளைக் கவனத்தில் எடுக்காமல் விட்டு விட்டீர்களே, கல் முதலாளிகளை கவனத்தில் எடுக்காமல் விட்டு விட்டீர்களே, இந்தக் குறை இன்றளவும் நீடிக்கிறதே என்ற குறை எல்லோருக்கும் உண்டு. பெரியார் ஒன்றை சொல்லுவார். ஒரு முறை பெரியார் அடிக்கடி கொள்கையை மாற்றிக் கொள்கிறீர்கள் என்று கேட்டார்களாம். இருக்கலாம், நான் மாற்றி இருக்கலாம். நியாயமான காரணம் இருக்கும். ஊட்டியில் ஸ்வெட்டர் போடச் சொன்னேன். மேட்டுப்பாளையத்தில் கழட்டிவிடு என்று சொன்னால், நீ தானே ஸ்வெட்டர் போடு என்று சொன்னாய் என்கிறீர்கள். ஆமாம் நான் தான் சொன்னேன். ஊட்டியில் சொன்னேன். மேட்டுப் பாளையத்தில் வேர்க்கிறது, கழட்டிவிடு என்று சொன்னால், நீ தான் சொன்னாய், நீ தான் சொன்னாய் என்றால்? மாற்றுவதற்கு நியாயமான காரணம் இருக்கிறது என்று சொல்லுகிறேன் என்றார் பெரியார். நியாயம் இருக்கிறதய்யா, அறியாமல் கூட நாம் விட்டிருக்கலாம். கவனத்தில் வராமலும் போயிருக்கக் கூடும். கவனத்திற்கு எல்லாம் வந்துவிடும். எல்லோரும் எல்லாவற்றையும் அறிந்தவர்கள் என்று நாம் சொல்லவில்லை. ஆனால், நம் கவனத்திற்கு வந்த பின்னாலும், அது குறித்து விமரிசனங்கள் வந்த பின்னாலும் கூட, அதைப் பற்றி ஆய்வு செய்வதற்கு தயங்குகிற, அல்லது மறுக்கிற தன்மை என்பது தான் விமரிசிக்கப்படுகிறது.

மார்க்சியத்தில் பல மாற்றங்கள் வந்தது. கிராம்சி-யைப்பற்றி சொல்லவேண்டும். அவரது கருத்தைப் படித்தவுடன் எனக்கு வியப்பாக இருந்தது. அண்டோனியோ கிராம்சி, மேல் கட்டுமானத்தில், இரண்டு மேல் கட்டுமானங்கள் இருக்கின்றன என்கிறார். ஒன்று வழக்கமாகச் சொல்லப்படுகிற அரசியல் மேற்கட்டுமானங்கள்; இன்னொன்று குடிமைச்சமூகம் என்ற ஒன்றைச் சொல்லுகிறார். சிவில் சொசைட்டி என்று ஒன்று இருக்கிறது. அது மெல்ல மெல்ல பேசிப்பேசி, அவர்களை அதற்கு ஆட்படுத்திவிடுகிறது. அதில் அவர் சொல்லுவார். இது வந்து கொயர்ஷன் coercion, பலவந்தம்; அது கன்செண்ட் consent. அது வேறு இது வேறு. அதன் மூலமாகத் தான் கல்வியின் மூலமாக பொது சமூகத்தின் உரையாடல் வழியாக நியாயப் படுத்திக் கொண்டே ஒரு கூட்டம் இருக்கும். சீக்கிரம் அதை கவிழ்த்து விடவே முடியாது என்று கிராம்சி ஒன்றை குடிமைச் சமூகம் என்பதை எடுக்கிறார். அது நேரடியாக அரசியல் பண்பும் அதே போல் நேரடியாக பொருளாதாரப் பண்பும் இல்லாத ஒரு கட்டுமானம். ஆனால், இன்னொரு பக்கம், சமயம் குடும்பம் கல்வி நிறுவனங்கள் போன்ற நிறுவனங்கள் வழியாக ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவாக பொது மனோபாவம் ஒன்றை உருவாக்குவது. அரசுக்கு ஆதரவான பொதுச் சம்மதத்தை, (consent), குடிமைச் சமூகம் உருவாக்கித் தருகிறது. இந்த சிவில் சொசைட்டி அதை மாற்றுவதற்கு என்ன செய்தது, அதைப் பற்றி நாம் எப்போதாவது சிந்தித்திருப்போமா? ஏனென்றால், அது இத்தாலி நாட்டில் ரோமில் இருப்பதனால் அவர் பேசினாரா தெரியவில்லை. அவர் அதைப் பற்றி ஒரு கேள்வி வைக்கிறார். நாம் அப்படியே ஏற்றுக் கொண்டு செய்துக் கொண்டிருக்கக் கூடாது.

(அடுத்த இதழில் முடியும்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049 newsdvk@gmail.com

## தோழர் ஆனைமுத்துவுக்கு கழக சார்பில் இறுதி மரியாதை

# உடல் மருத்துவமனைக்கு கொடையளிப்பு



06.04.2021 அன்று புதுவையில் முடிவெய்திய தோழர் வே. ஆனைமுத்து வின் உடல் அன்று இரவு தாம்பரத்தி லுள்ள அவரது மகன் இல்லத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன், முன்னாள் அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன், ஓய்வு பெற்ற நீதிபதி அரி பரந்தாமன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் ஜி. இராமகிருட்டிணன், முன்னாள் திட்டக் குழு துணைத் தலைவர் நாகநாதன், ‘ஓபிசி பேரமைப்பு’ சார்பில் அன்பு தனசேகரன், ஊடகவியலாளர் அய்யநாதன், தமிழ்மணி உள்ளிட்ட பலரும் இரங்கல் உரையாற்றினர்.

திராவிடர் விடுதலைக் கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் இறுதி மரியாதை செலுத்தி இரங்கல் உரையாற்றினார். பேராசிரியர் சரசுவதி , தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், விழுப்புரம் அய்யனார், இரா.உமாபதி, மயிலை சுகுமார், இராவணன், கரு. அண்ணா மலை, அருண்குமார், கன்னியப்பன், சிவா, மனோகர், மனோஜ் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

உடல் போரூர் இராமச்சந்திரா மருத்துவமனைக்கு கொடையாக வழங்கப்பட்டது.

## கொரோனா காலத்திலும் கொழுத்தவர்கள் அதானியும் – அம்பானியும்

உலக கோடீஸ்வரர்களின் பட்டியலை, ஒவ்வொரு ஆண்டும் பிரபல ‘போர்ப்ஸ்’ பத்திரிகை வெளியிட்டு வருகிறது. அதன்படி தனது 35-ஆவது உலகப் பெரும் பாணக்காரர்களின் பட்டியலை ‘போர்ப்ஸ்’(Forbes’ 35th Annual World’s Billionaires List -2021) வெளியிட்டுள்ளது.

இதில், அதிகப் பணக்காரர்களைக் கொண்ட நாடுகளின் வரிசையில், இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. 100 கோடி டாலருக்கும் அதிகமாக - அதாவது, ரூ. 7 ஆயிரத்து 300 கோடிக்கும் அதிகமான சொத்து மதிப்பு கொண்டவர்களை ‘பெருங் கோடீஸ்வரர்கள்’ (பில்லியனர்கள் - Billionaires) என்று அழைக்கிறார்கள். அந்த வகையில், பில்லியன் டாலருக்குமேல் சொத்து படைத்த பணக்காரர்களின் எண்ணிக்கை இந்தியாவில் 140 ஆக உயர்ந்துள்ளது.

அமெரிக்கா 724 பில்லியனர்களுடன், முதலிடத்திலும், சீனா 698 பில்லியனர்களுடன் இரண்டாமிடத்திலும் இருக்கும் நிலையில் ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளைத் தாண்டி,140 பெருங்கோடீஸ்வரர்களுடன், இந்தியா மூன்றாமிடத்தைப் பிடித்துள்ளது. இந்தப் பட்டியலில் ஜெர்மனி நான்காம் இடத்திலும், ரஷ்யா ஐந்தாம் இடத்திலுமே உள்ளன.அதேபோல, போர்ப்ஸ் பட்டியலில், இந்தியாவின் முதற்பெரும் பணக்காரரான ‘ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ்’ தலைவர் முகேஷ் அம்பானி, தற்போது உலகின் 10-ஆவது பெரும்பணக்காரராகவும், ஆசியாவின் முதற்பெரும் பணக்காரராக உருவெடுத்துள்ளார். இதுவரை அந்த இடத்தில் இருந்த சீனாவின் முதற்பெரும் பணக்காரரான அலிபாபா நிறுவனத்தின் தலைவர் ஜேக் மா-வை, அம்பானி பின்னுக்குத் தள்ளியுள்ளார். அம்பானியின் சொத்துமதிப்பு 8,450 கோடி அமெரிக்க டாலர்களாக ( 84.5 பில்லியன் டாலர்- சுமார் ரூ. 6.27 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது.

முகேஷ் அம்பானிக்கு, கொரோனா பொதுமுடக்கக் காலத்தில் மட்டும், 3,500கோடி அமெரிக்க டாலர் சொத்து சேர்ந்துள்ளது. ரிலையன்ஸ் நிறுவனத்தின்நிகர கடன் பூஜ்ஜியமாகி இருக்கிறது. முகேஷ் அம்பானிக்கு அடுத்து, இந்தியாவின் 2-ஆவது பெரும்பணக்காரராக- பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பரும், நிலக்கரிச் சுரங்கம், விமான நிலையங்கள், துறைமுகம் என அனைத்தையும் வளைத்துப் போட்டு வருபவருமான- கவுதம் அதானி உருவெடுத்துள்ளார். அதானியின் சொத்து மதிப்பு 5,050 கோடிடாலராக அதிகரித்துள்ளது. கடந்த 2020-ஆம் ஆண்டில் மட்டும் அதானியின்சொத்து மதிப்பு 5 மடங்கு உயர்ந்துள்ளதாக ‘போர்ப்ஸ்’ இதழ் தெரிவித்துள்ளது.

அதானி உலக அளவிலும் 24-ஆவது பெரும்பணக்காரராக மாறியுள்ளார். இந்தியாவில் அம்பானி, அதானிக்கு அடுத்தபடியாக, 3-வது இடத்தை 2,350கோடி சொத்து மதிப்புடன் எச்.சி.எல். நிறுவனர் ஷிவ் நாடாரும், 4-வது இடத்தை,1,650 கோடி டாலர் மதிப்பிலான சொத்துடன் ‘அவென்யூ சூப்பர்மார்ட்’ நிறுவனத்தின் முதலாளி ராதாகிஷன் தாமணியும், 5-ஆவது இடத்தை,1,590 கோடி டாலர் சொத்து மதிப்புடன் ‘கோடக் மகிந்திரா’ மேலாண் இயக்குநர் உதய் கோடக்-கும் பிடித்துள்ளனர். கடந்த ஆண்டு, இந்தியாவில் 102 பெருங்கோடீஸ்வரர்கள் இருந்த நிலையில், அது இந்த ஆண்டு 140 ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்தமாக கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு, 59 ஆயிரத்து 600 கோடி அமெரிக்க டாலர்களாக- அதாவது, ரூ. 44 லட்சத்து27 ஆயிரம் கோடிகளாக உயர்ந்துள்ளது.

உலக அளவில் ‘அமேசான்’ நிறுவனர் ஜெப் பெசாஸ் 177 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ. 12 லட்சத்து 74 ஆயிரத்து 400 கோடி) சொத்து மதிப்புடன் முதலிடத்தையும், டெஸ்லாவின் தலைமை செயல் அதிகாரி எலான் மாஸ்க் 151 பில்லியன் அமெரிக்க டாலர் சொத்து மதிப்புடன் இரண்டாமிடத்தையும் பிடித்துள்ளனர். மூன்றாவது இடத்தில் ‘எல்விஎம்எச்’ தலைமை செயல் அதிகாரி பெர்னார்ட் அர்னால்ட் (150 பில்லியன் டாலர் சொத்து மதிப்பு), நான்காவது இடத்தில் ‘மைக்ரோசாப்ட்’ நிறுவனத்தின் உரிமையாளர் பில்கேட்ஸ், ஐந்தாவது இடத்தில் ‘முகநூல்’(Face Book) நிறுவனர் மார்க் ஜூக்கர்பெர்க் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

# ‘தோழர்’ ஆனைமுத்து படத்திறப்பு



பெரியாரியப் பெருந்தொண்டர் தோழர் வே. ஆனைமுத்து, கடந்த 06.04.2021 அன்று 96ஆம் அகவையில் புதுவையில் முடிவெய்தினார். தோழர் வே ஆனைமுத்து அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு, திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 10.04.2021 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, திராவிடர் விடுதலைக் கழக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு அன்பு தனசேகர் தலைமையேற்று உரையாற்றினார். தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் படத்தை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார்.

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சென்னை மாவட்ட செயலாளர் வாலாசா வல்லவன், தோழர் வே. ஆனைமுத்து வரலாற்றை - தொண்டினை விளக்கி ஒரு மணி நேரம் பேசினார். இறுதியாக கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தோழர் ஆனைமுத்து - பெரியாரியல் தொகுப்பு மற்றும் வகுப்புரிமைக்கு வாழ்நாள் முழுதும் அர்ப்பணித்ததை பல்வேறு வரலாற்று நிகழ்வுகளுடன் ஒன்றரை மணி நேரம் உரையாற்றினார்.




**பொள்ளாச்சி** : தோழர் வே.ஆனைமுத்து படத்திறப்பு - நினைவேந்தல், திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு திராவிடர் கழகம் சார்பில் ஆனைமலை வட்டம், கா.க.புதூர் பூஞ்சோலை அரங்கத்தில் 11-4-2021 மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

தோழர் வே. ஆனைமுத்து படத்தை கார்த்திகேயன் திறந்து வைத்தார். தமிழ்நாடு திராவிடர் கழகம் சார்பில் சண்முகவேல் பிரபாகரன், தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் சபரிகிரி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். நிறைவாக, திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் வெள்ளிங் கிரி, தோழர் ஆனைமுத்துவின் போராட்ட வரலாறுகளை கருத்துரையாற்றினார்.

திமுகழக கிளைச் செயலாளர் காசு.மாரிசுவரன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை வெற்றி, தமிழ்நாடு மாணவர் மன்றம் பிரசாத், பூஞ்சோலை சார்பில் கிருஷ்ணப்பிரியா உள்ளிட்ட மாணவர்களும் தோழர்களும் கலந்து கொண்டனர்.



**ஈரோடு** : ஈரோட்டில் 11.04.2021 அன்று காலை 10 மணி அளவில் அரசு மருத்துவமனை அருகில் பெரியாரிய தோழர் வே. ஆனைமுத்து அவர்களுக்கு பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது.

நினைவேந்தலில், திராவிட முன் னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் சுப்பு லட்சுமி செகதீசன், திராவிடர் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, புரட்சி கர இளைஞர் முன்னணி, தமிழர் கழகம், மக்கள் சிவில் உரிமைக் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக அமைப்புச் செயலாளர் இரத்தின சாமி, கணேசன், ஈரோடு: வடக்கு மாவட்டச் செயலாளர் வேணு கோபால், செந்தில்குமார், திருமுருகன் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th April 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN